# இறைவன் இருக்கிறானா?



Does God Exists (Tamil)

# இறைவன் இருக்கிறானா?

இந்தக் கேள்விக்கு என்னுடைய மறு மொழி 'ஆம்' என்பதாகும். என்னுடைய ஆய்வு மற்றும் அனுபவத்தின் அடிப் படையில் நான் மிக மனவுறுதியோடு இறைவன் இருக்கிறான் என்று கூற முடியும். இதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை. நான் இறைவன் இருக்கிறான் என்று சொல்லும் போது அதை நான் அறிவியல் உணர்வோடு சொல்கிறேனே அல்லாமல் அறியாமல், உணராமல் பொதுப்படையாகச் சொல்லவில்லை.

மக்கள் பொதுவாக, அவர்கள் எதையும் நிரூபிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியும் என நினைக்கிறார்கள். ஆனால் இது அறிவியல் பூர்வமானது அன்று. நவீன அறிவியலின்படி, ஒருவர் எதையும் நிரூபிக்கவோ நிராகரிக்கவோ முடியாது. உறுதியாகச் சொல்ல முடியாது; உத்தேசமாகத்தான் கூற முடியும். ஏதேனும் ஒரு பொருள் உண்டு என்பதற்கு போதிய விவரங்கள் இருந்தால் அன்றி அது உண்டு என்று கூற முடியாது.

> இறைநம்பிக்கை நம்முடைய இரத்தத்தில் கலந்திருக்கிறது, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பிறவி இறை நம்பிக்கையாளர்களே

இறைவன் இருக்கிறானா? எனும் கேள்வியே இன்னொரு கேள்வியை எழுப்புகிறது. மனித இனவியல் ஆய்வு - மனித இனத்தைப் பற்றிய அறிவியல் - இறைவனைப் பற்றிய உணர்வு மனித இயல்பில் ஆழ ஊன்றிய ஓர் அம்சம் ஆகும் என்று கூறுகிறது. இறை நம்பிக்கை நம்முடைய இரத்தத்தோடு கலந்துவிட்டது. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பிறவியிலேயே இறை நம்பிக்கையுள்ளவர்கள்தாம். ஏதேனும் ஒரு நேரத்தில் இந்த உணர்வு ஏற்பட்டே தீரும். குறிப்பாக, திக்கற்ற நிலையிலும் இடர்பாடு தோன்றும்போதும் நாம் எல்லாவற்றிற்கும் மேலான ஒரு பரம்பொருள் இருப்பதாக உணர்கிறோம். ஒவ்வோர் ஆணும் பெண்ணும் இந்த உண்மையை தம் வாழ் நாளில் ஒரு தடவையேனும் உணராமல் இருக்க முடியாது.

அப்படியானால் இந்தக் கேள்வி எப்படி எழுகிறது? இறைவன் உண்டு எனும் உணர்வு நம் சதையிலும் இரத்தத்திலும் ஊடுருவி இருந்தால் இறைவன் உண்டா, இல்லையா எனும் கேள்வி எழுப்பப்படுவது ஏன்?

இதற்கு காரணத்தைக் கண்டுபிடிப்பது மிக எளிது.

தங்கள் மனதில் ஊன்றி இருக்கும் நம்பிக்கைக்கு அறிவுக்குப் பொருத்தமான அடிப்படை ஏதேனும் உள்ளதா, அறிவியல் ரீதியிலான நிரூபணம் ஏதாவது உண்டா என்று அறிய மக்கள் விரும்புவதே காரணமாகும்.

இறைவன் என்ற நம்பிக்கைக்கு அறிவியல் ஆதாரம் உண்டு என்பது வலியுறுத்தப்பட வேண்டும். ஆனால் மக்கள் அதைக் கண்டுபிடிக்க பொதுவாகக் கையாளும் முறை அறிவியல் ரீதியிலானது என்று தவறாக எண்ணிக் கொண்டிருப்பது தான் அவர்கள் அதைக் கண்டு பிடிக்க முடியாமல் போவதற்குக் காரணம். கண்ணால் கண்டுணரக் கூடிய ஒரு நிரூபணத்தை மக்கள் தேடுகின்றனர். இது அறிவியல் முறையல்ல. அதை நிர்மாணிப்பதற்கு அடிபப்படைத் தத்துவம் இதுவன்று. சரியான அளவுகோலைப் பிரயோகித்தால் இறைவன் இருக்கிறான் என்பது உண்மையே என்பது புலனாகும்.

1965 ஆம் ஆண்டு நான் லக்னோவில் வசித்துக் கொண்டிருந்த போது நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கு நினைவு கூர்கிறேன். தத்துவ ஞானத்தில் முனைவர் பட்டம் பெற்ற ஒரு பெரியவரை சந்திக்க நேர்ந்ததது. அவர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸலின் ஆர்வலர். ஆனால் அவர் இறை நம்பிக்கை இல்லாதவர். இறைவனைப் பற்றிய எங்கள் கலந்துரை யாடலின் போது அவர், “இறைவன் இருக்கிறான் என்பதை நிரூபிக்க நீங்கள் கையாளும் அளவுகோல் என்ன?” என்று கேட்டார். அதற்கு நான், “மற்ற எதையும் நிரூபிக்க நீங்கள் கையாளும் அதே அளவுகோல் தான்....! என்று பதிலளித்தேன். அந்த உரையாடல் இதனோடு முடிவடைந்தது. அதற்குப் பிறகு வேறு கேள்வியும் எழவில்லை; பதிலும் அளிக்கப்படவில்லை.

கல்வியாளனாகிய இந்த மனிதர் மௌனமாகி விட்டதற்குக் காரணம் என்ன? காரணம் மிகச் சாதாரணமானது. யாவரும் அறிந்ததும் கூட, நான் அவருக்கு அளித்த பதில் ஒருவிதத்தில் ஞாபகமூட்டப்பட்டதே ஆகும். நாம் வாழும் உலகில் இறைவனைப் பற்றிய கருத்திலும் கையாளப்பட்டே ஆக வேண்டும் என்றுதான் நான் ஞாபகமூட்டினேன்.

மனித அறிவு இரண்டு விதமான வளர்ச்சிப் படிகளை (Phases) கொண்டது. ஐன்ஸ்டீனுக்கு முந்தைய காலம், ஐன்ஸ்டீனுக்குப் பிந்தைய காலம். ஐன்ஸ்டீனுக்கு முந்தைய காலத்தில், இந்த அண்டம் மற்றும் பருப் பொருள் (Macro and Material) பற்றிய அறிவே பரவி இருந்தது. கண்கூடாக அறிந்து கணிக்கப்படக் கூடிய அறிவு இது. எனவே, உண்மையில் உலகில் உள்ளது என்று சொல்லப்படும் யாவும் கண்ணால் பார்க்கக்கூடியதாக இருந்தாக வேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்தது. கண்ணால் காண முடியாதவை உண்மையில் ‘இல்லாதவை’ என்றே கருதப்பட்டது. கண்ணால் பார்க்கக்கூடிய உலகமே உண்மையானது. கண்ணால் பார்க்க முடியாதது உண்மையல்ல.

அது வெறும் கற்பனையே என்பதுதான் இதன் பொருள்.

இந்தத் தத்துவம், "பகுத்தறிவுக்கு உகந்த நேர்காட்சி வாதம்" (Logical Possitivism) என்றழைக்கப்பட்ட ஒரு கோட்பாட்டை உருவாக்கியது. ஏற்றுக் கொள்ளத் தக்க அறிவார்ந்த வாதம் என்பது பருப்பொருள் ரீதியாகக் காட்டப்படக் கூடியது மட்டுமே, மற்றவை ஆதாரமற்றவை, ஏற்கத் தக்க வாதமன்று என்று இந்தக் கோட்பாடு கூறுகிறது.

ஐன்ஸ்டீனுக்குப் பிந்தைய காலத்தில், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் அணு பிளக்கப்பட்ட போது, சூழ்நிலை மாறியது. அணு பிரித்துக் காட்டப்பட்டபின் சடப் பொருள் திடமான ஒன்று என்ற கருத்து மறைந்துவிட்டது. அணு உலகுக்கு அப்பால், நுண்பொருள் உலகு அதன் இடத்தைப் பிடித்தது. இங்கு யாவும் கண்ணால் பார்க்க முடியாத, அளக்கவோ உணரவோ முடியாத அலைகளாக மாற்றப்பட்டன.

அறிவுலகில் எழுந்த இந்தப் புரட்சிக்குப் பின் தர்க்க அல்லது பகுத்தறிவு வாதம் பெரும் மாற்றத்திற்கு உள்ளானது. மாறுபட்ட இந்தச் சூழ்நிலை தத்துவ ஞானிகளையும் அறிவியலாளர்களையும் தர்க்கவாத அடிப்படைக் கொள்கை களை மாற்றியமைக்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கியது. இப்பொழுது அதன் விளைவாக அனுமானத்தின் அடிப் படையில் எழும் வாதம் நேரடியான வாதத்தைப் போன்றே ஆதாரமாக ஏற்றுக் கொள்ளத் தக்கது என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது.

இன்றைய அறிவியல், எண்ணிறந்தவற்றை உள்ளடக்கி யுள்ளது. மின்னனு, ஈர்ப்பாற்றலின் விதிகள், ஊடு கதிர் (எக்ஸ்ரே) போன்றவை. இவை யாவும் இயற்கையில் சடப்பொருள்களல்ல. இவை கண்டுணரக் கூடியவை அல்ல. ஆனாலும் ஒவ்வொரு அறிவியலாளரும் அவை உள்ளன என்று நம்புகின்றனர். அவற்றை நாம் கண்ணால் பார்க்க முடியாது என்றாலும் அவற்றின் பலன் களை (விளைவுகளை) நாம் பார்க்கிறோம். என்பதுதான் இதற்குக் காரணம். எடுத்துக் காட்டாக, ஈர்ப்பாற்றலைப் பொருத்த வரையில் கீழே விழும் ஆப்பிள் பழத்தையும், ஊடுருவும் கதிரைப் பொருத்தவரையில் நிழற்படத்தையும் கூறலாம். இவற்றை எல்லாம் உள்ளவையாக நம்புவது அவற்றை நாம் கண்ணால் கண்டல்ல, அவை விளைவிப்பவற்றைக் கண்டு நம்புகிறோம். வேறுவிதமாகச் சொல்வதானால் மறைமுகமான அறிவின் மூலம், அவற்றை நாம் அறிந்து கொள்கிறோம்.

சரியான அளவுகோலை பயன்படுத்தும் பொழுது இறைவனின் இருப்பு நிருபிக்கப்பட்ட உண்மையே என்பது புலனாகும்

மனித அறிவில் ஏற்பட்ட மாற்றம் தர்க்க வாதத்தின் கோட்பாட்டையே மாற்றிவிட்டது. இன்று அனுமானத்தின் அடிப்படையில் எழும் வாதம் நேரடியான வாதத்தைப் போன்று ஏற்கத் தக்கது என்பது நிலைநாட்டப்பட்டு விட்டது. (விவரங்களுக்கு பார்க்க: 'மனித அறிவு' பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்)

ஐன்ஸ்டீனுக்கு முந்தைய காலத்தில் இறை நிராகரிப் பாளர்கள், கடவுள் உண்டு எனும் வாதம் புலனறிவுக்கு அப்பாற்பட்ட உலகைச் சார்ந்தது என்று வாதிட்டனர். இதை நிரூபிக்க நேரடியான வாதம் ஏதும் இல்லாததால் இறைநம்பிக்கை தர்க்க ரீதியிலானதன்று என்றும் அது சம்பந்தப்பட்ட மறைமுகமான வாதங்கள் எல்லாம் அறிவியல் ரீதியாக ஏற்கத் தக்கவை அல்ல என்றும் அவை அனுமானங் கள் தாம் என்றும் கூறப்பட்டது.

ஆனால் இன்று ஒட்டு மொத்த சூழ்நிலையே மாறி விட்டது. எதுவுமே கண்டுணரக் கூடியதல்ல. எனவே, ஏதேனும் ஒன்று உள்ளது என்பதை நேரடியான வாதங்களை விட அனுமானத்தின் அடிப்படையிலான வாதங்களாலேயே நிலைநாட்ட முடியும்.

> நாம் இந்த உலகை உன்னிப்பாக கவனிக்கும் போது, இந்த பிரபஞ்ச படைப்பின் உருவாக்கத்தில் தெளிவான திட்டமிடல், கச்சிதமான வடிவ உருவாக்கம், அதி புத்திசாலித்தனமான கட்டுப் படுத்தும் தன்மை அடங்கி யிருப்பதை உணர்ந்துக் கொள்ள முடியும்

அனுமானத்தின் அடிப்படையில் எழும் வாதம் கண்ணால் காண முடியாத நுண்ணிய படைப்புகளுக்குப் பொருந்து மேயானால் அது இறைவன் இருக்கிறான் என்று நிரூபிப்ப தற்கும் பொருந்தவே செய்யும்.

பண்டைக்காலம் தொட்டு இறையியல் வல்லுநர்கள் ஒரு திட்டம் இயங்கும்போது அந்தத் திட்டத்தை வகுத்தவர் ஒருவர் இருந்தே ஆகவேண்டும் என்று வாதிட்டு வருகிறார்கள். நாம் வாழும் இவ்வுலகம் முறையாக, சீராகத் திட்டமிடிப்பட்ட ஒன்று என்று கருதுவதால் அதைத் திட்டமிட்டவர் ஒருவர் இருக்கவேண்டும் என்று நம்பும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறோம்.

## பிரபஞ்சத்தின் தொடக்கம்.

ஆரம்பத்திலிருந்தே தொடங்குவோம். 250000 கோடி ஆண்டுகளுக்கு முன்பு விண்வெளியில் பெருவெடிப்பு

(Big Bang) நிகழ்ந்ததாக அறிவியல் கூறுகிறது. இந்தப் பெருவெடிப்புக்குப் பின் நம்முடைய இந்தப் பிரபஞ்சம் தோன்றியது. தொடக்கத்தில் விண் பந்து (Cosmic Ball) என்றழைக்கப்படுவது மாத்திரமே இருந்தது என்று நம்புவதற்குரிய சான்று இருந்ததாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இன்று பிரபஞ்சத்தின் காணப்பெறும் ஒவ்வொரு துகளும் ஒன்றோடு பின்னிப் பிணைந்து இந்த விண் பந்தில் (Cosmic Ball) மிகவும் இறுக்கமாக அழுத்தப்பட்ட நிலையில் இருந்தன.

வானியல் ஆய்வின்படி இந்த விண் பந்து திடீரென வெடித்தது. நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருக்க இந்தத் துகள் வெடித்துச் சிதறி வெளிப்பட்டன. இந்த நிகழ்வின் விளைவால் தோன்றியதுதான் இந்தப் பிரபஞ்சம். இவை எல்லாம் ஒரு சில வினாடிகளில் நேர்ந்திருக்கலாம்.

இந்தப் பெருவெடிப்பின் விளைவால் பிரபஞ்சம் தோன்றியது. மிகவும் ஆக்கப்பூர்வமானதும் அர்த்தமுள்ளது மானதும் ஆகும். இந்த அற்புதமான நிகழ்வு ஒன்றே பெருவெடிப்பு நிச்சயமாகத் திட்டமிட்டு நிகழ்த்தப் பட்டது என்று நம்புவதற்குப் போதுமானதாகும். இது திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்வு என்று நிரூபணமாகும்போது தானாகவே அதைத் திட்டமிட்ட ஒருவர், மிகச்சிறந்த திட்டமி/டுபவர் இருந்தாக வேண்டும் என்பதும் நிரூபணமாகிறது. மிகச்சிறந்த திட்டுமிடுபவர்தாம் எல்லாம் வல்ல இறைவன் ஆவான்.

> ‘இறைவன் உள்ள பிரபஞ்சம்’ அல்லது ‘பிரபஞ்சமே இல்லை’ என்பதே என இவ்விரண்டில் ஒன்றை தேர்ந்தெடுப்பது தான் நம் முன் உள்ள தேர்வு

**- மவுலானா வஹிதுத்தீன் கான்**


For more information, contact : TL 04

GOODWORD

324, Triplicane High Road,
Chennai - 600 005.
☎ +91-44-4352 4599
+91 97908 53944
✉ chennaigoodword@gmail.com

goodwordbooks.com

1, Nizamuddin West Market,
New Delhi - 110 013.
✉ info@goodwordbooks.com

www.alquranmission.org • www.wkhan.net
www.alrisala.org • www.cpsglobal.org

CPS International centre for peace & spirituality